செ.வெ. எண் : 454 நாள் : 20.7.2007

# செய்தி வெளியீடு

## கூட்டுறவு, உணவுத் துறை திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து முதலமைச்சர் கலைஞர் ஆய்வு செய்தார்

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழக அரசின் பல்வேறு துறைகளில் நடைபெற்று வரும் பணிகளைப் பற்றிய ஆய்வைத் தொடர்ந்து– இன்று (20.7.2007) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையால் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகளின் முன்னேற்றம், விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிர்க் கடன்களுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் பொதுவிநியோகத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து தலைமைச் செயலகத்தில் ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வின்போது கூட்டுறவுத்துறை அமைச்சர், உணவுத்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறைச் செயலாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மை ஆணையாளர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், காவல்துறை தலைவர் (குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் குற்றவியல்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டுறவுத் தேர்தலை நடத்துவதற்கு நடுநிலையான அமைப்பு ஒன்றினை ஏற்படுத்துவது சம்பந்தமாக விவாதிக்கப்பட்டு “கூட்டுறவுத் தேர்தல் ஆணையம்” ஒன்றை அமைத்திட – இதுபோன்ற ஆணையங்கள் நடைமுறையில் உள்ள மாநிலங்களிலிருந்து விபரங்களைப் பெற்று பரிசீலிப்பது என்று இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ரிலையன்ஸ் போன்ற பெரிய தனியார் நிறுவனங்கள் சில்லரை வணிகத்தில் நுழைவதைத் தடுத்து நிறுத்தி, சில்லரை வணிகர்களைப் பாதுகாக்கும் பொருட்டு– கேரளா மற்றும் மேற்கு வங்காள மாநிலங்களில் என்ன நடைமுறைகள் கையாளப்படுகின்றன என்பதை அறிந்து தமிழகத்தில் நடவடிக்கை மேற்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது.

மேலும், எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு ஐந்து இலட்சம் குடும்பங்களுக்கு இணைப்புகள் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதிலும், கூடுதலாகப் பத்து இலட்சம் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் இந்த ஆண்டு இத்திட்டத்தை விரிவுபடுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

காவிரி டெல்டா பகுதிகளில் நீர்பாசனத்திற்காக மேட்டூர் அணை திறக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் பயன்பெறும் வகையில் கூட்டுறவு வங்கிகள் மூலம் உடனுக்குடன் பயிர்க்கடன் வழங்கும் பணிகளை விரைவுபடுத்திடவும்; இதற்காக உடனடியாக தஞ்சாவூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு 15 கோடி ரூபாயையும், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிக்கு 25 கோடி ரூபாயையும் விடுவிப்பதென்றும்;

கூட்டுறவு விவசாயக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டதற்கு ஈடாகக் கூட்டுறவு வங்கிகளுக்கு அரசு வழங்கும் நிதியின் மூலம் கடந்த காலத்தில் நிதிநிலை நலிவடைந்த 12 வங்கிகள் உட்பட தமிழ்நாட்டில் உள்ள 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும் விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் கூட்டுறவு வங்கிகளின் நடவடிக்கைகளை விரைவுபடுத்தி, கிராமப் பொருளாதாரத்தை முன்னேற்றமடையச் செய்யும் முனைப்பான நிறுவனங்களாகக் கூட்டுறவு வங்கிகளை மேம்படுத்திடவும்;

2004ஆம் ஆண்டிலிருந்து கடன்கள் வழங்காமல் இருந்து வரும், தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளை (நிலவள வங்கி) நீண்ட காலக் கடன்கள் வழங்கும் பணிகளில் மீண்டும் ஈடுபடுத்திடத்தக்க வகையில் அவைகளுக்குப் போதிய நிதி வசதிகளை ஏற்படுத்துவதற்குக் கடனீட்டுப் பத்திரங்கள் வழங்கலுக்கான சாத்தியக் கூறுகள் மற்றும் இதர வழிமுறைகளை ஆய்ந்து, உரிய நடவடிக்கைகளை விரைவுபடுத்திடவும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன்;

ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கும் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டுவருகின்றபோதிலும் அதன் பயன்கள் உரியவர்களுக்குச் சென்றடைவதைத் தொடர்ந்து கண்காணிப்பதென்றும்;

புதிய குடும்ப அட்டைகள் கோரும் மனுக்கள் மீது உடனுக்குடன் உரிய ஆய்வுகளை மேற்கொண்டு தகுதியுடையவர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதென்றும், மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரங்களை மனுதாரர்களுக்குத் தெரிவிக்கஆவன செய்திட வேண்டும் என்றும்;

மேலும், அச்சடிக்கப்பட்டு மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்ட குடும்ப அட்டைகளின் விவரங்கள் இணையதளத்தில் வெளியிடப்படவேண்டும் என்றும்;

இதுவரை பெறப்பட்ட மனுக்கள் மீது அனுமதிக்கப்பட்டவர்களுக்கு 15–9–2007–க்குள் அட்டைகள் அச்சடித்து வழங்கப்பட வேண்டும் என்றும்;

**இனிப் பெறப்படும் குடும்ப அட்டைகளுக்கான மனுக்களின்மீது நடவடிக்கை எடுத்து இரண்டு மாத காலத்திற்குள் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படவேண்டும் எனக் கால உச்சவரம்பு நிர்ணயிப்பதென்றும்;**

**போலி குடும்ப அட்டைகளைக் களைவதற்கான முயற்சிகளை மேலும் தீவிரப்படுத்துவதென்றும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.**

**பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசி மற்றும் இதர பொருட்களைக் கடத்துவோர் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு, அவை கடத்தப்படுவது முற்றிலும் தடுக்கப்பட வேண்டும் என்றும்; குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கும் பொருட்களின் எடை குறைவை தடுக்கும் நோக்கத்துடன் அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் மின்னணு தராசுகள் அக்டோபர் மாதத்திற்குள் வழங்க வேண்டுமென்றும் முடிவுகள் எடுக்கப்பட்டன.**

***

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.